தினமணி

# வெங்காய ஏற்றுமதி மீதான தடை நீக்கம்

First Published : 18 Feb 2011 03:05:54 AM IST



புது தில்லி, பிப்.17: வெங்காய ஏற்றுமதி மீதான தடையை மத்திய அரசு வியாழக்கிழமை நீக்கியது. உள்நாட்டில் வெங்காயத்தின் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து விவசாயிகள் போராட்டம் நடத்தியதால் ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

உணவு உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்களுக்கான அதிகாரமளிக்கப்பட்ட அமைச்சர்கள் குழு நிதி அமைச்சர் பிரணாப் தலைமையில் கூடி இது தொடர்பாக விவாதித்தது. அதன் பின்னர் தடையை நீக்க முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், தடை நீங்கினால் மீண்டும் விலை உயரும் அபாயம் உள்ளதால் முன்னெச்சரிக்கையாக குறைந்தபட்ச ஏற்றுமதி விலை (ஒரு டன் ரூ. 28 ஆயிரம்) கொண்ட ஆர்டருக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட்டது.

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி தொடக்க விழாவில் பங்கேற்க வங்கதேசம் சென்றதால் வேளாண் அமைச்சர் சரத் பவார் இந்த கூட்டத்தில் பங்கேற்கவில்லை. இணை அமைச்சர் கே.வி. தாமஸ், வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா ஆகியோர் ஜப்பானில் தடையற்ற வர்த்தக ஒப்பந்த கையெழுத்து நிகழ்ச்சியில் பங்கேற்க சென்றதால் அவர்களாலும் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள முடியவில்லை.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரம், திட்டக்குழுதுணைத் தலைவர் மான்டேக் சிங் அலுவாலியா ஆகியோர் பங்கேற்றனர்.

வெங்காயத்தின் அதிகபட்ச ஏற்றுமதி விலை ஒரு டன் 600 டாலராகும். இத்தகைய வெங்காய ஏற்றுமதிக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என்று வேளாண் கூட்டுறவு அமைப்பான நாஃபெட்-டின் செயலர் தெரிவித்தார்.

நாசிக் மொத்த விலை சந்தையில் வெங்காயம் விலை கிலோ ரூ. 4 முதல் 12 வரை விற்கப்பட்டது. சில்லறை விற்பனை விலை கிலோ ரூ. 20 முதல் ரூ. 25-க்கு விற்பனையானது. ஏற்றுமதி மீதான

தடைக்கு முன் இந்தியா 11.58 லட்சம் டன் வெங்காயத்தை வளைகுடா நாடுகள், இலங்கை, மலேசியாவுக்கு ஏற்றுமதி செய்தது.

**மா மரங்களில் தத்துப் பூச்சிகள் கட்டுப்படுத்துவது எப்படி?**

First Published : 17 Feb 2011 03:06:16 PM IST

வேலூர்: வேலூர் மாவட்டத்தில் வளரும் மா மரங்களில் தத்துப் பூச்சி தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இதை கட்டுப்படுத்துவது எப்படி? என்பது குறித்து தோட்டக்கலை துணை இயக்குநர் எஸ். ராதாகிருஷ்ணன் கூறியது:

வேலூர் மாவட்டத்தில் சுமார் 18 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் அல்போன்சா, பங்கனப்பள்ளி, ஹிமாம்பசந்த், செந்தூரா, ருமானி, பெங்களூரா உள்ளிட்ட மாமரங்கள் பயிரிடப்பட்டு, தற்போது இம்மரங்கள் பூக்கத் தொடங்கியுள்ளன.

இப்போதுள்ள பருவ சூழலில், சிறிய பழுப்பு நிறமுள்ள தத்துப் பூச்சிகள் பூக்கள் மற்றும் இளம் தளிர்களில் உள்ள சாறை உறிஞ்சி சேதப்படுத்த வாய்ப்புண்டு.

இப்பூச்சிகளை கட்டுப்படுத்த, 0.03 சதவீதம் அசாடிராக்டின் என்ற வேம்பு கலந்த தாவரப் பூச்சிகொல்லியை, தேவையான அளவு ஒட்டும் திரவத்துடன் கலந்து 7 நாள்களுக்கு ஒரு முறை, இரண்டு தடவை தெளிக்க வேண்டும்.

தோட்டக்கலைத் துறை அலுவலர்களின் பரிந்துரைப்படி உரிய பூச்சிக்கொல்லியை மட்டுமே தெளிக்க வேண்டும். பரிந்துரை செய்யாத பூச்சிக்கொல்லிகளை தெளிப்பதால், பூச்சிகளின் எதிர்ப்புத் தன்மை அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும். இதனால்
அப்பூச்சிகளை கட்டுப்படுத்த முடியாது என்றார் ராதாகிருஷ்ணன்.

**காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி**

First Published : 17 Feb 2011 02:32:10 PM IST

நீடாமங்கலம், பிப். 16: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் துல்லிய பண்ணையத்தில் காய்கறி சாகுபடி குறித்த மூன்று நாள் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்ட நபார்டு வளர்ச்சி அதிகாரி வி.ஏ. ராகவன் தலைமை வகித்தார். மாவட்ட தோட்டக் கலை உதவி இயக்குநர் சி. சீனிவாசன் முன்னிலை வகித்தார். வேளாண் அறிவியல் நிலைய செயல்பாடுகள் பற்றி முனைவர் கு. சுதாகர் விளக்கினார்.

துல்லிய பண்ணையம் பற்றி நிலையப் பேராசிரியர்கள் பயிற்சியளித்தனர். செயல்விளக்கங்களும் செய்து காட்டப்பட்டது. பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 30 விவசாயிகள் பயிற்சி பெற்றனர்.

பயிற்சியின் நிறைவில் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் விவசாயிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

பயிற்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் கை. குமணன் நன்றி தெரிவித்தார்.

**நெல் கொள்முதல் தொகை உச்ச வரம்பால் விவசாயிகள் பாதிப்பு**

First Published : 17 Feb 2011 02:22:21 PM IST

தஞ்சாவூர், பிப். 16: நாளொன்றுக்கு ரூ.3 லட்சம் வரை மட்டுமே நெல் கொள்முதல் செய்வது என்று சில கொள்முதல் நிலையங்களில் உச்ச வரம்புத் தொகை நிர்ணயித்திருப்பதால், நெல் மூட்டைகள் தேங்கிக் கிடப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரத்தநாடு பகுதியில் உள்ள காவாரப்பட்டு, ஒக்கநாடு மேற்கு, குலமங்களம், கக்கரை, பூவத்தூர், கண்ணந்தங்குடி மேற்கு மற்றும் கிழக்கு உள்ளிட்ட சில நெல் கொள்முதல் நிலையங்களில் நாளொன்றுக்கு ரூ.3 லட்சத்திற்கு மேல் நெல் கொள்முதல் செய்ய ஊழியர்கள் மறுப்பதாகக் கூறப்படுகிறது.

இதனால், விவசாயிகள் கொண்டு வந்த நெல் மூட்டைகள் கொள்முதல் நிலையங்களில் தேங்கிக் கிடக்கின்றன. பல நாள்கள் வெட்ட வெளியில் நெல் மூட்டைகளை வைத்திருப்பதால், ஈரப்பதம் உள்ளிட்ட நெல்லின் தரம் பாதிக்கப்பட்டு, கொள்முதலில் இழப்பு ஏற்படுகிறது என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த ஜனவரி மாத இறுதியில் நெல்லின் ஈரப்பதம் அதிகமாக இருப்பதாகக் கூறி, கொள்முதல் செய்ய மறுக்கப்பட்டது. ஆனால், இப்போது நிலைமை முற்றிலும் மாறி, ஈரப்பதம் மிகக்குறைவாக இருந்தும் கொள்முதலில் ஏற்பட்டுள்ள காலதாமதம் விவசாயிகளைப் பாதித்துள்ளது.

அரசுக் கொள்முதல் நிலையங்களில் ஏற்படும் இந்தக் காலதாமதத்தால், தனியார் வியாபாரிகளிடம் குறைந்த விலைக்கு நெல் மூட்டைகளை விற்கும் அவல நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். இதுகுறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால், போராட்டம் நடத்துவது என்று ஒரத்தநாடு பகுதி விவசாயிகள் முடிவெடுத்துள்ளனர்.

**பால் உற்பத்தியை அதிகரிக்க யோசனை**

First Published : 17 Feb 2011 01:44:35 PM IST

தேனி, பிப். 16:கறவை மாடு வளர்ப்பில் பால் உற்பத்தியை அதிகரிக்கக் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மகேந்திரன் யோசனை தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:கூடுதல் பால் உற்பத்திக்கு மாடுகளுக்கு சமச்சீர் தீவனம் வழங்க வேண்டும். பால் உற்பத்தி மற்றும் மாட்டின் எடைக்கு ஏற்ப பசுந்தீவனம், அடர் தீவனம், உலர் தீவனம் ஆகியவற்றை சமச்சீர் விகிதத்தில் அளிக்க வேண்டும். அடர் தீவனத்தால் பால் உற்பத்தி அதிகரிப்பதுடன், மாட்டுக்கு தேவையான புரதம் மற்றும் கொழுப்புச் சத்துகள் கிடைக்கும். தீவனம் குறைவதால் பால் உற்பத்தி குறைவதுடன், பசு சினைப்படும் வாய்ப்பு குறையும். மேலும் கன்று ஈனும் இடைவெளி அதிகரிப்பதுடன் பசுவின் நோய் எதிர்ப்புத் திறனும் குறைகிறது என்றார்.

**35 இடங்களில் உலர் களம் அமைக்க அரசுக்குப் பரிந்துரை**

First Published : 17 Feb 2011 01:45:08 PM IST

தேனி, பிப். 16: தேனி மாவட்டத்தில் 35 இடங்களில் உலர் களம் அமைப்பதற்கு வேளாண் விற்பனைத் துறை சார்பில் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட விவசாய இணை இயக்குநர் ராமகிருஷ்ணன் கூறினார்.இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:வேளாண்மை விற்பனைத் துறை சார்பில் ஊராட்சி நிர்வாகம் மூலம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் உலர் களங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நெடுஞ்சாலைகள் மற்றும் கிராம இணைப்புச் சாலைகளை விவசாயிகள் உலர் களமாக பயன்படுத்தி வருவதால் போக்குவரத்து இடையூறு மற்றும் விபத்துகள் ஏற்படுவதாக புகார் எழுந்துள்ளது. விவசாயிகள் விளைப் பொருட்களை உலர வைத்து பிரித்தெடுக்க அரசு சார்பில் அமைத்து தரப்பட்டுள்ள உலர் களங்களைப் பயன்படுத்த வேண்டும். விவசாயிகளின் வசதிக்காக வேளாண் விற்பனைத் துறை மூலம் புதிதாக 35 இடங்களில் உலர் களம் அமைப்பதற்கு அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றார்.

**வாடல் நோயைக் கட்டுப்படுத்த வழிமுறைகள்**

First Published : 17 Feb 2011 01:46:08 PM IST

தேனி, பிப். 16: வாழையில் மகசூல் இழப்பு ஏற்படுத்தும் வாடல் நோயை கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து தேனி மாவட்டம் உத்தமபாளையம் தோட்டக்கலை உதவி இயக்குநர் ராஜன் யோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியது:

வாழையில் மழை காலங்களிலும், தோட்டத்தில் தண்ணீர் அதிக அளவு தேங்கி நிற்கும் போதும் வாடல் நோய் தாக்குவதற்கு வாய்ப்புகள் உள்ளன. நோய் தாக்கிய இலைகள் மஞ்சள் நிறத்தில் காணப்படும். பாதிக்கப்பட்ட இலைகளின் காம்பு ஒடிந்து மரத்தை சுற்றியவாறு இருக்கும். நோய் பாதிக்கப்பட்ட மரத்தினை குறுக்கிலும், நீள்வாக்கிலும் வெட்டிப் பார்த்தால் மஞ்சள், சிவப்பு அல்லது கருஞ்சிவப்பு நிறத்தில் திட்டுகள் மற்றும் கோடுகள் காணப்படும்.

வாழையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த தோட்டத்தில் தேங்கியுள்ள தண்ணீரை வடித்துவிட்டு மரம் ஒன்றுக்கு 50 மில்லி கிராம் பெவிஸ்டின் மாத்திரையை வேரும், தண்டு பாகமும் சேரும் இடத்தில் 45 டிகிரி சாய்வாக கிழங்கு பாகத்தில் இட்டு மண் அணைத்து மூடி விட வேண்டும்.

ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் காப்பர் ஆக்ஸிகுளோரைடு அல்லது பெவிஸ்டின் பூஞ்சானக் கொல்லி மருந்தை மண் வழியாக கிழங்கு பாகம் முழுவதும் நனையும் வகையில் ஊற்றி நோய் பரவுவதைத் தடுக்கலாம்.

நோய் எதிர்ப்பு ரகமான பூவன் வாழை பயிரிடலாம். கிழங்கில் உள்ள வேர்கள் மற்றும் மேல்புற தோலை சீவிவிட்டு, 14 மில்லி தண்ணீர், 0.2 கார்பன்டேசின் மற்றும் 0.5 மானோகுரோட்டபாஸ் கரைசலில் 30 நிமிடம் வரை நனைத்து நடவு செய்யலாம் என்றார்.

**கால்நடை தீவனப் பயிர்**

எஸ்.சபேஷ்

First Published : 17 Feb 2011 03:05:53 PM IST

அரக்கோணம்: கால்நடை தீவனப் பயிரான "கம்பு நேப்பியர் ஒட்டுப்புல் கோ-3' பயிரிட்டு மாடுகளுக்கு அளிப்பதன் மூலம் பால்வளத்தை அதிகரிக்க முடியும் என கால்நடை மருத்துவர்கள் யோசனை தெரிவிக்கின்றனர்.

இத் தீவனப் பயிரை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். நிலத்தை தயாரிக்க இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழ வேண்டும். ஹெக்டேருக்கு 25 டன் மக்கிய தொழு உரம் இட வேண்டும். 60 செ.மீ. இடைவெளியில் பார்கள் அமைக்க வேண்டும்.

உரமிடுதல்: மண் பரிசோதனை செய்து அதன் பின்னர் உரமிடவது நல்லது. மண் பரிசோதனை செய்யாவிடில் ஹெக்டேருக்கு 150:50:50 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து இட வேண்டும். 50 சதவீத தழைச்சத்தை நட்ட 30ஆவது நாளில் மேலுரமாக இட வேண்டும். ஒவ்வொரு அறுவடைக்கு பின்னரும் 75 கிலோ தழைச்சத்தை அடியுரமாக இடுவதன் மூலம் மகசூலை நிலை நிறுத்தலாம்.

இடவேண்டிய தழை மணிசத்தின் அளவில் 75 சதவீதத்துடன் அசோஸ்பைரில்லம் (ஹெக்டேருக்கு 2 கிலோ), பால்போபாக்டீரியா (2 கிலோ) அல்லது அசோபாஸ் (4 கிலோ) கலந்து கலவையாக இடும்போது விளைச்சலை அதிகரிப்பதுடன் 25 சதவீத உர அளவு குறைகிறது.

நடவு: நன்கு நீர் பாய்ச்சிய பின் ஒரு வேர்கரணை அல்லது ஒரு தண்டக்கரணையை 50 ஷ் 50 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். இவ்வாறு நடவு செய்ய ஒரு ஹெக்டேருக்கு 40 ஆயிரம் கரணைகள் தேவைப்படுகின்றன.

கலப்புப் பயிராக 3 வரிகள் கம்பு நேப்பியர் ஒட்டுப்புல்லும், ஒரு வரி வேலி மசாலும் பயிர் செய்தால் ஊட்டச்சத்தை அதிகப்படுத்தலாம்.

நீர் மேலாண்மை: நட்ட 3ஆவது நாளில் உயிர் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். பின்பு 10 நாள்களுக்கு ஒரு முறை நீர்ப்பாய்ச்சுவது சிறந்தது. கழிவு நீரையும் பாசனத்துக்குப் பயன்படுத்தலாம்.

அறுவடை: நடவுக்கு பின்னர் 75 முதல் 80 நாள்களில் முதல் அறுவடையும், அதற்கடுத்து 45 நாளிலும் அறுவடை செய்யலாம். ஹெக்டேருக்கு 400 டன் தீவனம் கிடைக்கும். அதிகப்படியான தூர்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை வெட்டி எடுத்து விட வேண்டும்.

ஆக்சலேட் என்ற நச்சுபொருளின் தன்மையை குறைக்க இத்தீவனத்துடன் 5 கிலோ பயறுவகை தீவனத்தை கலந்து கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும். அல்லது சுண்ணாம்பு தண்ணீர் அல்லது தாது உப்பு கலவையை கால்நடைகளுக்கு அளிக்கலாம்.

அரக்கோணத்தை அடுத்த சிறுனமல்லியைச் சேர்ந்த விவசாயி சுந்தரம் இந்த தீவனத்தை பயிரிட்டு மாடுகளுக்கு அளித்ததன் மூலம் நல்ல பலன் பெற்றுள்ளார். மேகந்திரவாடி கால்நடை மருத்துவர் கோபி அவருக்கு ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

அரசே இந்த தீவனப் பயிருக்கான புல்கரணைகளை இலவசமாக அளிக்கிறது.

**காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி**

First Published : 17 Feb 2011 02:32:10 PM IST

நீடாமங்கலம், பிப். 16: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் துல்லிய பண்ணையத்தில் காய்கறி சாகுபடி குறித்த மூன்று நாள் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்ட நபார்டு வளர்ச்சி அதிகாரி வி.ஏ. ராகவன் தலைமை வகித்தார். மாவட்ட தோட்டக் கலை உதவி இயக்குநர் சி. சீனிவாசன் முன்னிலை வகித்தார். வேளாண் அறிவியல்

நிலைய செயல்பாடுகள் பற்றி முனைவர் கு. சுதாகர் விளக்கினார். துல்லிய பண்ணையம் பற்றி நிலையப் பேராசிரியர்கள் பயிற்சியளித்தனர். செயல்விளக்கங்களும் செய்து காட்டப்பட்டது. பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 30 விவசாயிகள் பயிற்சி பெற்றனர். பயிற்சியின் நிறைவில் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் தி. செங்குட்டுவன் விவசாயிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் முனைவர் கை. குமணன் நன்றி தெரிவித்தார்.

**விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் ஒத்திவைப்பு**

First Published : 17 Feb 2011 02:01:39 PM IST

சிவகங்கை, பிப். 16:÷சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பிப். 18-ம் தேதி நடைபெற இருந்த விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம், பிப். 25-ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.÷ மாவட்ட ஆட்சியர் தலைமையில் காலை 11 மணிக்கு நடைபெறும் இக் கூட்டத்தில் அனைத்துத் துறை உயர் அதிகாரிகள் பங்கேற்பர். இக் கூட்டத்தில் விவசாயம் சார்ந்த பிரச்னைகளை விவசாயிகள் தெரிவிக்கலாம் என்று என்று மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**இயற்கை உரமாகும் "குப்பைகள்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,00:00 IST



**ஈரோடு:** "இன்டக்ரேடட் வேஸ்ட் மேனேஜ்மென்ட் அண்டு அர்பன் சர்வீசஸ் என்ற நிறுவனம் ஈரோடு உள்ளிட்ட ஆறு நகரங்களில், குப்பைகளை கொண்டு இயற்கை உரம் தயாரித்து வருகிறது. ஈரோடு, வெண்டிபாளையத்தில் உள்ள 12 ஏக்கர் குப்பைக்கிடங்கில், 4 ஏக்கரில் குப்பைகளை பயன்படுத்தி இயற்கை உரம் தயாரிக்கிறார்கள். மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து, தினசரி 10 டன் உரம் தயாரிக்கப்படுகிறது. பெரிய நிறுவனங்களுக்கு, ஒரு டன் இயற்கை உரம் 3,500 ரூபாய்க்கும், சில்லறை விற்பனையில் ஒரு கிலோ 5 ரூபாய்க்கும் விற்கின்றனர். ஐதராபாத், மும்பை, பெங்களூரு, திருவனந்தபுரம், டில்லி, கான்பூர் ஆகிய நகரங்களுக்கும் இயற்கை உரம் அனுப்பப்படுகிறது.

**வருது புதிய ரக தக்காளி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,00:00 IST



**மதுரை:** நாட்டு தக்காளியில், புளிப்புச்சுவை அதிகமாக இருப்பதால் சமையலுக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. தோல் பகுதி மெல்லியதாகவும், அதிக விதைகளும் இருப்பதால் சீக்கிரம் அழுகி விடும் என்பதால், இந்த வகை தக்காளியை நீண்ட நாட்கள் வைத்திருந்து பயன்படுத்த முடியாது. எனவே, புளிப்புச்சுவை மாறாமல் நீண்டநாள் வைத்திருந்து பயன்படுத்தும் வகையில் புதிய ரக தக்காளியை உருவாக்கும் முயற்சியில் மதுரை விவசாயக் கல்லூரி ஈடுபட்டுள்ளது. "உள்ளூர் ரகத்தில் ஒரு செடிக்கு அதிகபட்சமாக இரண்டரை கிலோ பழம் கிடைக்கிறது. ஆனால், வீரிய ஒட்டு ரகத்தில் 5 கிலோ பழங்கள் கிடைக்கும். ஆய்வுக்காக, தைவானில் உள்ள ஆசிய காய்கறி ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் இருந்து 81 ரகங்களை சேர்ந்த தக்காளி விதைகளை வாங்கி உள்ளோம். இவற்றை, கல்லூரி வளாகத்தில் விதைத்து, அறுவடை செய்துள்ளோம்,' என்கிறார்கள் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள்.

**சோள அறுவடைக்க "இயந்திரம்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,00:00 IST



**திருப்பூர்:** பொங்கலூரில், ஆடிப்பட்டத்தின் போது நல்ல மழை பெய்ததால் ஆயிரக்கணக்கான ஏக்கரில் சோளம் பயிர் செய்யப்பட்டது. கதிர் முற்றி தற்போது அறுவடைக்கு தயாராக உள்ளது. சோளத்தை அறுவடை செய்வது கடினமான பணி, அறுவடையின் போது கை, கால்களில் காயம் ஏற்படுவதால் இவற்றை அறுவடை செய்ய கூலி ஆட்கள் முன்வருவதில்லை. அப்படியே வந்தாலும், அதிக கூலி கேட்கின்றனர். இதனால், தங்களின் குடும்பத்தினரை வைத்தே சில விவசாயிகள் சோளத்தை அறுவடை செய்கின்றனர். சில பெரிய விவசாயிகள் சோள அறுவடைக்கு நவீன இயந்திரங்களை வாங்கி உள்ளனர். ஆட்களை வைத்து ஒரு ஏக்கர் பயிரை அறுவடை செய்ய ஒரு நாளைக்கு 4,000 ரூபாய் செலவு பிடிக்கும். இயந்திரத்தை பயன்படுத்தும் போது செலவு பாதியாக குறைவதுடன் பணியும் விரைவாக முடிந்து விடுகிறது. இதனால், இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்துவதில் பல விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

**வடக்கு சத்திரத்தில் விதை கிராம திட்ட பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,01:11 IST

தென்காசி : வடக்கு சத்திரத்தில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது. வாசுதேவநல்லூர் வட்டாரம் வடக்கு சத்திரம் கிராமத்தில் விதை கிராம திட்டத்தின் படி சிறுதானியங்கள் விதை கிராம பயிற்சி முகாம் நடந்தது. டவுன் பஞ்.,கவுன்சிலர் குருசாமி தலைமை வகித்தார். தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்ட கரும்பு துல்லிய பண்ணைய வேளாண்மை துணை அலுவலர்

நமச்சிவாயம் வரவேற்றார். வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் பேசும் போது, திட்டத்தின் நோக்கம், அவசியம், சிறு தானிய விதைகளின் தேவைகள் பற்றி விளக்கினார். வேளாண்மை துணை அலுவலர் ரவிச்சந்திரன் பேசும் போது, சோளம், கம்பு, கேழ்வரகு விதைகள் பற்றி விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர் செல்லையா நன்றி கூறினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் சரவணக்குமார், அண்ணாதுரை செய்திருந்தனர்.

### 160 ஏக்கர் நில விற்பனை விவகாரம்: பதிவுத்துறை விளக்கம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,02:25 IST

சென்னை:"திருத்தணி பகுதியில் மூன்று கிராமங்களில் ஒட்டு மொத்தமாக, 160 ஏக்கர் நிலம் விற்பனை செய்யப் படவில்லை' என, பதிவுத்துறை தெரிவித்துள்ளன.இது குறித்து, பதிவுத்துறை தலைவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:திருத்தணி ஒன்றியத்திற்கு உட்பட்ட மூன்று கிராமங்களில் 160 ஏக்கர் நிலம் திடீர் விற்பனை செய்யப்பட் டதாக தகவல் வெளியானது.இதைத் தொடர்ந்து காஞ்சிபுரம் மாவட்ட பதிவாளரிடம் அறிக்கை பெறப்பட் டது.இதன்படி, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி ஒன்றியம், சத்ருஞ்செய்புரம் ஊராட்சியில், சீனிவாசபுரம், முஸ்லீம் நகர், அருந்ததி காலனியில் 160.07 ஏக்கர் நிலம் குறித்து, நேற்று வரை விற்பனை ஆவணம் ஏதும் பதிவு செய்யப்படவில்லை.இருப்பினும், இந்த நிலம் குறித்து விற்பனை ஆவணம் பதிவுக்கு வந்தால், விற்பனை செய்ப வர்களுக்கு சம்பந்தப்பட்ட நிலங்களில் உரிமை உள்ளதா என்பதை நன்கு பரிசீலித்து பதிவு செய்யுமாறு, சார் பதிவா ளருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தென்னை மரத்தில் ஒட்டுண்ணி தாக்குதல்: விவசாயிகள் கலக்கம்

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,00:22 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் பரவலாக தென்னை மரத்தில் ஒட்டுண்ணிகளின் தாக்குதல் அதிகரித்துள்ளதால், தேங்காய் விளைச்சல் குறைந்து வருவதால், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.
விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், 10 ஆயிரம் ஹெக்டேரில் 12 லட்சம் தென்னை மரங்கள் உள்ளன. குறிப்பாக, தென்பெண்ணை ஆற்று படுகை, சின்னாறு படுகைகளில் அதிக அளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு சாகுபடி செய்யப்படும் தேங்காய் வெளி மாவட்டங்கள் மட்டுமன்றி வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி

செய்யப்படுகிறது. ஆண்டுதோறும், இப்பகுதிகளில் 15 கோடி ரூபாய்க்கு தேங்காய் விற்பனை நடக்கிறது. சில மாதங்களாக இப் பகுதிகளில் உள்ள தென்னை மரங்களில் கருந்தலை புழுக்களின் தாக்கம் அதிகரித்துள்ளதால் தேங்காய் விளைச்சல் 20 சவீதத்துக்கும் மேல் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். கருந்தலை புழுக்கள் தாக்கிய மரங்களில் உள்ள ஓலைகள் சிதைந்து காணப்படுகிறது. புழுக்களின் தாக்குதல் அதிகரிக்கும் போது அடிஓலையில் இருந்து குருத்து ஓலை வரை காய்ந்து மரங்கள் பட்டுபோகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் தேங்காய் உள்ளிட்ட பகுதி பொருட்களின் உற்பத்தி கடுமையாக பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். இது குறித்து தர்மபுரி வேளாண் அலுவலர் தாம்சன் கூறியது: தென்னையில் ஏற்கெனவே ஈரியோஃபைட் நோய் தாக்குதலால், உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், கருந்தலை புழுக்களின் தாக்குதலும் அதிகரித்துள்ளதால், விவசாயிகள் ஒருங்கிணைந்த மேலாண்மை தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். நோய் தாக்கிய மரங்களில் "டெக்னீஸ்' ஒட்டுண்ணியை விவசாயிகள் விட வேண்டும். இந்த வகை ஒட்டுண்ணி, கருந்தலை புழுக்களின் முட்டைகளின் மேல் இனப்பெருக்கம் செய்வதால் கருந்தலைபுழுக்களின் வளர்ச்சி முழுமையாக தடுக்கப்படுகிறது. ஒரு ஏக்கர் தென்னை மரங்களில் 21 பாக்கெட் "டெக்னீஸ்' பூச்சிகளை விட வேண்டும். மேலும், விவரங்களுக்கு அருகில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை விவசாயிகள் அனுகலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**நெல்கொள்முதல் நிலையம் நேரில் ஆய்வு தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அதிரடி**
பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,00:44 IST

தஞ்சாவூர்: தஞ்சாவூர் மாவட்டத்தில் நடப்பு நெல் கொள்முதல் பருவத்தில் 362 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில், தஞ்சாவூர் அருகே உள்ள மாரியம்மன் கோவில், அருள்மொழிப்பேட்டை, காமாட்சிபுரம் நேரடி நிலையங்களில் நெல் கொள்முதல் பணிகள் குறித்து கலெக்டர் சண்முகம் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின்போது, மாரியம்மன் கோவில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் பட்டியல் எழுத்தர் சீனிவாசன் சரியான முறையியில் நெல் கொள்முதல் பணியை மேற்கெள்ளவில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இதன்படி அப்பணியாளரை இடமாற்றம் செய்யுமாறு கலெக்டர் சண்முகம் உத்தரவிட்டார்.

அருள்மொழிப்பேட்டை நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் ஆய்வு செய்தபோது, கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூடைகளை மறு ஆய்வு செய்தார். ஒவ்வொரு மூடையிலும் கூடுதலாக எடை வைக்கப்பட்டிருந்ததால் நெல் கொள்முதல் நிலைய பட்டியல் எழுத்தர் ராஜாமாணிக்கத்தை

தற்காலிக பணி நீக்கம் செய்து உத்தரவிட்டார். மேலவெளி பஞ்சாயத்து உட்பட்ட காமாட்சிபுரம் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் ஆய்வு செய்த போது, ""கொள்முதல் பணியாளர்கள் விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூடைகளை சரியான அளவு எடை வைத்து பணி மேற்கொள்ளாத பணியாளர்களை உடனடியாõக மாற்றம் செய்ய வேண்டும் எனவும், மாவட்டம் முழுவதும் நெல் கொள்முதல் நிலையங்களை மாவட்ட உள்ள துணை கலெக்டர்கள், தாசில்தார்கள் அடிக்கடி ஆய்வு செய்து கண்காணித்திட உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாக," கலெக்டர் சண்முகம் தெரிவித்தார். ""நடப்பு கொள்முதல் பருவத்தில் இதுவரை இரண்டு லட்சத்து 47 ஆயிரத்து 432 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

எட்டு நடமாடும் நெல் கொள்முதல் நிலையங்களும் செயல்பாட்டில் உள்ளது. விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு தரமான நெல் கொண்டு வந்து சரியான எடைக்கு வழங்கி உரிய தொகையை பெற்று செல்லலாம். கொள்முதல் நிலையங்களில் பணியாளர்கள் தவறு செய்தால், உடன் நடவடிக்கை எடுக்கப்படும், என கலெக்டர் சண்முகம் தெரிவித்தார்.
இந்த ஆய்வின்போது, நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் தேவதாஸ் உடனிருந்தார்.

**மலை காய்கறிகள் கோபியில் சாகுபடி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,02:39 IST

கோபிசெட்டிபாளையம்: ஊட்டி உள்ளிட்ட மலைப்பகுதியில் விளையும் காய்கறிகளை கோபி சுற்று வட்டாரப் பகுதியில் சாகுபடி செய்யும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.கேரட், பீட்ரூட், முள்ளங்கி, காலிஃபிளவர் போன்றவை பெரும்பாலும் குளிர் நிறைந்த மலைப்பகுதிகளில் அதிகம் பயிராகின்றன. மலைப்பகுதிகளில் விவசாய ஆட்கள் பற்றாக்குறை காரணமாக, சமீப காலமாக பூக்களை அதிகளவில் பயிரிட துவங்கியுள்ளனர். காய்கறிகள் பயிரிடுவதை ஊக்குவிக்கும் பொருட்டு, தோட்டக்கலைத் துறை சார்பில், குறைந்த விலையில் விதை மற்றும் உபகரணங்கள் அளிக்கப்படுகிறது.

விவசாயிகளும் குறைந்த நாளில் விளையக்கூடிய காய்கறிகளை பயிரிடுகின்றனர்.கோபி வட்டாரத்தில் செப்டம்பர் முதல் நவம்பர் இறுதிவரை வடகிழக்கு பருவமழை வெளுத்து வாங்கியது. கத்தரிக்காய், வெண்டைக்காய், பயறு வகைகள், தக்காளி, பாகற்காய், புடலை உள்ளிட்ட காய்கறிகளை விவசாயிகள் பயிரிடத் துவங்கினர். குறிப்பாக, கோபி வட்டாரத்தில் அதிகம் பயிரிடப்படாத காலிஃபிளவர் மற்றும் முள்ளங்கி வகைகளை வேட்டைக்காரன் கோவில்,

காமராஜ் நகர், கொளப்பலூர், சிறுவலூர், மொடச்சூர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பு விவசாயிகள் பயிரிட்டனர்.

தற்போது காலிஃப்ளவர் மற்றும் முள்ளங்கி ஆகியவற்றின் அறுவடை விறுவிறுப்பாக துவங்கியுள்ளது. வரும் காலங்களில் காலிஃப்ளவர் மற்றும் முள்ளங்கி சாகுபடி பரப்பளவு அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது."கோபி வட்டாரத்தில் குளிர் காலத்தில் மட்டும் காலிஃப்ளவர் மற்றும் முள்ளங்கி போன்ற காய்கறிகளை பயிரிட்டு வருகிறோம். இரண்டு மாதங்களுக்கு முன் பெய்த மழையால், காய்கறி விளைச்சல் நன்றாக உள்ளது. வியாபாரிகள் நேரடியாக வந்து முள்ளங்கிக்கு கிலோவுக்கு ஆறு ரூபாயும், காலிஃப்ளவர் 10 ரூபாய் வரையும் விலை கொடுத்து வாங்கிச் செல்கின்றனர்' என, விவசாயிகள் தெரிவித்தனர்.

**விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்துக்கு இழப்பீடு தொகை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 18,2011,02:34 IST

ஈரோடு: விலங்குகளால் ஏற்படும் பயிர்ச்சேதத்துக்கு நிவாரண நிதியாக 11 லட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.ஈரோடு மண்டல வன அலுவலர் அருண் கூறியதாவது:கோடையில், வனத்தை சுற்றியுள்ள தோட்டங்களில் விலங்குகள் அதிகளவு தஞ்சம் அடைகின்றன. இதனால் ஏற்படும் பயிர்ச் சேதத்தால், விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஈரோடு மண்டல வனப்பகுதியில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி, வனத்துறை நிவாரண நிதி வழங்கி வருகிறது.

ஈரோடு, சத்தியமங்கலம் மற்றும் நாமக்கல் வனகோட்ட பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு நிவாரண நிதி வழங்க 11 லட்சம் ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. விலங்குகளால் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டால், உடனடியாக விவசாயிகள் சம்பந்தப்பட்ட வனச்சரகரிடம் தெரிவிக்க வேண்டும். அதை தொடர்ந்து அதிகாரிகள் சோதனை செய்து, பயிர்சேத மதிப்பீன்படி நிவாரணம் வழங்கப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

**தென்னை சார்ந்த தொழிலில் ஆட்கள் பற்றாக்குறை:உற்பத்தி பாதிக்கும் அபாயம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,22:49 IST

ஆனைமலை : தென்னை நார், கயிறு உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் முன்பிருந்ததை போல் இந்த தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டுவதில்லை. அரசின் 100 நாள் வேலைக்கு

சென்றுவிடுவதால் ஆள் பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கும் நிலை உள்ளது.பொள்ளாச்சி தாலுகாவில் 500க்கும் மேற்பட்ட தென்னை நார் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றில் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.
பொள்ளாச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் தென்னை விவசாயம் அதிகமாக உள்ளதால் தேங்காய் மட்டையில் இருந்து நார்களை பிரித்து கயிறு உற்பத்தி செய்யும் தொழில் நடந்து வருகிறது. தேங்காய் மட்டையில் இருந்து நார்களை பிரிக்க தென்னை மட்டைகள் நீரில் நன்கு ஊறவைக்கப்பட்டு மட்டைகள் இயந்திரத்தின் மூலம் நார்களாக பிரிக்கப்படுகிறது. நார்கள் தரம் பிரிக்கப்பட்டு உலர வைக்கப்படுகிறது.

தென்னை நார்களில் மெத்தை, மேட்கள், கயிறுகள் என பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகிறது. தென்னை நார்களில் இருந்து அதிக அளவிலான கயிறு உற்பத்தி நடைபெறுகிறது.நார் தொழிற்சாலை உரிமையாளர்கள் கூறியதாவது:தென்னை நார், கயிறு உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் முன்பிருந்ததை போல் இந்த தொழிலில் ஈடுபட ஆர்வம் காட்டுவதில்லை. அரசின் 100 நாள் வேலைக்கு சென்றுவிடுவதால் ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி பாதிக்கும் நிலை உள்ளது.பொள்ளாச்சியில் உற்பத்தியாகும் கயிறுகள் கேரளா,குஜராத் உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும்; சீனா,ஜெர்மன்,நேபாளம் போன்ற வெளி நாடுகளுக்கும் அனுப்பப்படுகிறது. கயிறுகள் மேட் செய்வதற்கும், அலங்கார பொருட்கள் செய்வதற்கும் பயன்படுகிறது. இது மங்காடன், சிக்குவாடா, வெட்டூர் போன்ற பல ரகங்களாக உற்பத்தி செய்யப்படுகிறது. குறிப்பாக கேரளாவில் ஆலப்புழா, கோட்டயம், எர்ணாகுளம் போன்ற இடங்களுக்கும் அதிக அளவு அனுப்பப்படுகிறது. கயிறு உற்பத்திக்கு அரசு மானியம் கிடைப்பதால் உற்பத்தியாளர்களுக்கு ஓரளவு உதவியாக உள்ளது என்றனர்.

**"மரக்கழிவை எரிகட்டியாக மாற்றி விற்றால் அதிக லாபம்'**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,22:36 IST

மேட்டுப்பாளையம் : "" மரக் கழிவுகளை நவீன தொழில்நுட்பம் மூலம் எரிகட்டிகளாக தரம் உயர்த்தி மதிப்பு கூட்டிய பொருளாக மாற்றினால், அதிக விலைக்கு விற்பனை செய்யலாம். இதை தொழிலாக செய்தால் தொடர்ந்து வேலைவாய்ப்பு கிடைப்பதோடு, நல்ல லாபம் பெறலாம்,'' என, மதிப்பு கூட்டு தொழில்நுட்ப திட்ட அலுவலர் பார்த்திபன் தெரிவித்தார்.மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் தொழிற்சாலைகள் சார்ந்த வேளாண் காடுகள்

மற்றும் மதிப்புகூட்டு தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகள், மகளிர் சுயஉதவிக்குழுவினருக்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்படுகின்றன.

காய்ந்த இலைகள், தழைகள், மரக்குச்சி கழிவுகள், மரத்தூள் ஆகியவற்றை கொண்டு "பிரிக் கட்டிங்' தொழில்நுட்பம் மூலம் எரிகட்டிகளாக தரம் உயர்த்தப்பட்டு மதிப்பு கூட்டிய பொருளாக மாற்றப்படுகிறது. மதிப்புகூட்டு தொழில்நுட்ப திட்ட அலுவலர் பார்த்திபன் கூறியதாவது:மக்களின் தேவைகளுக்காகவும், தொழிற்சாலைகளின் மூலப்பொருளாகவும் மரங்கள் வளர்க்கப்படுகின்றன. பல்வேறு பயனுடைய மரங்களை வளர்க்கும்போது, சிறியது முதல் அதன் அறுவடை காலம் வரை உள்ள வளர்ச்சியில், நிறைய இலைகள், தழைகள், மரக்கழிவுகள் கிடைக்கின்றன. மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. இம்மரக்கழிவுகளை "பிரிக் கட்டிங்' தொழில்நுட்பம் மூலம் எரிகட்டிகளாக தரம் உயர்த்தப் பட்டு மதிப்பு கூட்டப்பட்ட பொருளாக பயன்படுத்தினால், அதிக லாபம் அடையலாம்.இதை எரிபொருளாக பயன் படுத்தினால் எரிதிறன் ஒரே மாதிரியாக இருக்கும். எரிசக்தி கலோரியும் (4000 கலோரி), வெப்பமும் அதிகரிக்கும். சுற்று சூழலுக்கு உகந்த மறுசுழற்சி ஆற்றல் எரிபொருளாகும்.

நிலக் கரி, மரம் போன்ற திண்ம எரிபொருள்களைவிட விலை குறைந்த பொருளாதார பயனுடையது. குறைந்த சாம்பலை உருவாக்கும்; ஈரப்பதத்தினால் நிலைத்து தொடர்ந்து எரியும் தன்மையுடையது. நிலக்கரியை விட அதிக அடர்த்தி உடையது. இயற்கை எரிபொருளின் விலை உயர்வால், இந்த எரிகட்டிகளுக்கு நல்ல மார்க்கெட் உள்ளது. உந்து தண்டு, திருகு அழுத்த பயன்பாடு என, இரண்டு வகையான உயிரி எரிகட்டி தொழில்நுட்பங்கள் நடைமுறையில் உள்ளன. இந்த எரிகட்டிகள் நிலக்கரிக்கு அடுத்து வெப்பத்திறன் கொண்டுள்ளதால், நிலக்கரியையும், விறகுகளையும் எரிபொருளாக கொண்டுள்ள தொழிற்சாலைகள் இதை பயன் படுத்தலாம். ஒரு டன் எரிகட்டிகள் தயாரிக்க 1,700 லிருந்து 2,500 ரூபாய் வரை செலவாகும். இதை மார்கெட்டில் 3,500 லிருந்து 4,250 ரூபாய் வரை விற்பனை செய்யலாம். ஒரு டன்னுக்கு அனைத்து செலவுகளும் போக 1,800 ரூபாய் வரை லாபம் கிடைக்கும். ஒரு மணிக்கு 1 டன் எரிகட்டிகள் உற்பத்தி செய்ய 13 லட்சம் ரூபாயில் இயந்திரங்களும், 250 கிலோ எரிகட்டிகள் உற்பத்தி செய்ய 7.50 லட்சம் ரூபாயிலும் இயந்திரங்கள் வாங்க வேண்டும்.

இதற்கு அரசு மானியம் வழங்கிறது. இதை மகளிர் சுய உதவிக்குழுவினர் கூட்டாக சேர்ந்து செய்தால், ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு இருந்து கொண்டே இருப்பதோடு, லாப கரமான தொழிலாகவும் அமையும். இதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். மரக்கழிவுகளை "பிரிக் கட்டிங்' தொழில்நுட்பம் மூலம் எரிகட்டிகளாக தரம் உயர்த்தப்படும் பயிற்சி, மேட்டுப்பாளையம் வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் இலவசமாக

அளிக்கப்படுகிறது. பயிற்சி பெற விரும்புவர்கள் கல்லூரி முதல்வர் அல்லது திட்ட அலுவலரை 04254 222010, 94435 05844 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு திட்ட அலுவலர் பார்த்திபன் கூறினார்.

**கறிவேப்பிலை பவுடர் தயாரிக்க தொழிற்சாலை அமைக்க யோசனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,23:05 IST

பல்லடம் : கறிவேப்பிலை விவசாயத்தை பாதுகாக்க, அதை பவுடராக்குவதற்கான தொழிற்சாலையை பல்லடம் பகுதியில் ஏற்படுத்த வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.பல்லடம், ஆலுத்துப்பாளையம் விவசாயிகளின் முக்கிய பயிராக கறிவேப்பிலை இருக்கிறது. இக்கிராமத்தில் மட்டும் 50 ஏக்கர் பரப்பளவில், கறிவேப்பிலை பயிர் செய்யப் பட்டுள்ளது. பல்லடம் சுற்றுப்பகுதியில் 200 ஏக்கரில் கறிவேப்பிலை விவசாயம் நடக்கிறது. பல்லடத்தில் இருந்து மேட்டுப்பாளையம், ஈரோடு, சென்னை, கேரளா உள்ளிட்ட இடங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது.நாற்று நடவு செய்து வளர்க்கப்படும் கறிவேப்பிலை, 110 நாட்களுக்கு ஒரு முறை அறுவடையாகிறது.

இந்தாண்டு ஒரு கிலோ சூ40 வரை விற்று, விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது. கறிவேப்பிலை விவசாயம் சிறக்க, அரசு சார்பில் உதவிகள் செய்ய வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. விவசாயிகள் கூறியதாவது:பனி காலத்தில் செடியின் வளர்ச்சி பாதிக்கப்படும். மேலும், பேன் பூச்சி தாக்குதல் அதிகமாக இருக்கும். இதனால், கிலோ சூ 40 வரை விற்கிறது. இதுவரை இல்லாத விலையில் விற்றாலும், அனைத்து விவசாயிகளுக்கும் பயன் கிடைப்பதில்லை. சராசரியாக கிலோ சூ18 முதல் சூ20 வரை, அதிகமான விவசாயிகள் விற்றுவிட்டனர். காரமடை, மேட்டுப்பாளையம் வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.

ஏக்கருக்கு ஐந்து டன் வரை மகசூல் கிடைத்தது. பல்லடம் பகுதியில் கறிவேப்பிலை விவசாயம் அதிகமாகி வருகிறது. பவுடராக மற்றும் திரவமாக தயாரிக்கக்கூடிய தொழிற்சாலையை அரசு ஏற்படுத்த வேண்டும். விலைவீழ்ச்சி ஏற்படும் காலத்தில், இழப்பை தவிர்க்க முடியும். மற்ற பயிர்களுக்கு வழங்கும் சலுகைகள், மானியம் கருவேப்பிலை சாகுபடி செய்வதற்கு கிடைப்பதில்லை. மேலும், பேன் பூச்சி தாக்குதல் ஏற்பட்டால், செடிகளை காப்பாற்ற முடிவதில்லை. கடந்தாண்டு சூ ஒரு லட்சம் வரை நஷ்டத்தை சந்தித்த விவசாயிகளும் இருக்கின்றனர்.எனவே, உரிய மருந்து மற்றும் கட்டுப்படுத்தும் வழியை விவசாயத்துறை செய்ய வேண்டும், என்றனர்.

**உழவர் சந்தை அடையாள அட்டை வழங்கல்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,23:01 IST

வெள்ளகோவில் : வெள்ளகோவில் வட்டார விவசாயிகளுக்கு உழவர் சந்தை அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அந்தந்த பகுதி தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை விவசாயிகள் அணுகி, அட்டையை பெற்றுக் கொள்ளலாம்.வெள்ளகோவில் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கிருஷ்ணகுமார் அறிக்கை: விவசாயிகள் விளைபொருட்களை விற்பனை செய்யும் வகையில், காங்கயத்தில் உழவர்சந்தை அமைக்கப்பட்டுள்ளது; பிப்., 25 முதல் சந்தை செயல்பாட்டுக்கு வருகிறது. வெள்ளகோவில் வட்டாரத்தில் காய்கறி பயிரிட்டுள்ள விவசாயிகள், உழவர் சந்தையில் விளைபொருட்களை விற்பனை செய்வதற்கு தோட்டக்கலைத்துறை சார்பில் அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

அதற்காக, சிட்டா அடங்கல், நல உடமை சான்று (ஒரிஜினல்), பாஸ்போர்ட் சைஸ் போட்டோ 2; ஸ்டாம்ப் சைஸ் போட்டோ 4 மற்றும் ரேஷன் கார்டு நகலுடன் அருகில் உள்ள தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். விண்ணப்பங்களை பூர்த்தி செய்து வழங்கினால், விரைவில் உழவர் சந்தை அடையாள அட்டை வழங்கப்படும். ஏற்கனவே விண்ணப்பித்த விவசாயிகளுக்கு தற்போது அட்டை வழங்கப்பட்டு வருகிறது, என்று தெரிவித்துள்ளார்.

**62 ஆண்டு கால முதிர்ந்த காபி செடிகள் மரங்களை வெட்ட அனுமதி கோரி மனு: ஐகோர்ட் உத்தரவு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,23:50 IST

மதுரை : கொடைக்கானல் அருகே கானல்காட்டில் 62 ஆண்டு கால முதிர்ந்த காபி செடிகள், மரங்களை வெட்ட அனுமதி கோரி, 1993 முதல் நிலுவையிலுள்ள மனு மீது எட்டு வாரங்களுக்குள் நடவடிக்கை எடுக்க கலெக்டருக்கு மதுரை ஐகோர்ட் கிளை உத்தரவிட்டது. கொடைக்கானல் காமனூரை சேர்ந்த ஜோதி, ராஜேந்திரன் தாக்கல் செய்த ரிட் மனு: எங்களுக்கு சொந்தமாக காமனூரில் 2.3 எக்டேர் நிலத்தில் ரெபஸ்டா, அராபிகா காபி தோட்டங்கள் உள்ளன. காபி செடிகள் 62 ஆண்டுகளானதால், முதிர்ந்து விட்டன. அவற்றை வெட்டி அப்புறப்படுத்தி, புதிய செடிகளை நட வேண்டும். காபிசெடிகள் மத்தியில் 700 நிழல் தரும் மரங்கள் உள்ளன. காபி செடிகளை வெட்ட, காபி போர்டிடம் முறையாக அனுமதி பெறப்பட்டது.

ஏற்கனவே 100 மரங்கள் காற்றில் விழுந்து கிடக்கின்றன. பாதுகாக்கப்பட்ட மரங்கள் பட்டியலில் இல்லாத மரங்கள், காபி செடிகளை வெட்டி அப்புறப்படுத்தவும், கொண்டு செல்லவும் அனுமதி வழங்க கலெக்டர், மாவட்ட வன அதிகாரி மறுத்து விட்டனர். அதை ரத்து செய்ய வேண்டும், என தெரிவிக்கப்பட்டது. மனு நீதிபதி எம்.வேணுகோபால் முன் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வக்கீல் வி.ஆர்.வெங்கடேசன் ஆஜரானார். அரசு வக்கீல் சசிக்குமார், ""மனுதாரர்களின் நில எல்லைகளை வரையறுக்காமல், மரங்களை வெட்ட அனுமதிக்க முடியாது,'' என்றார்.நீதிபதி உத்தரவில், ""நில எல்லைகளை வரையறுக்க, மனுதாரர்கள் வருவாய்த் துறையினரிடம் மனு செய்ய வேண்டும். அதை வருவாய் துறையினர் உதவியுடன் கலெக்டர் வரையறை செய்ய வேண்டும். வழக்கு 1993ல் இருந்து நீண்டகாலமாக நிலுவையில் இருப்பதால், கலெக்டர், மாவட்ட மலை பாதுகாப்பு கமிட்டியுடன் இணைந்து எல்லையை வரையறை செய்ய வேண்டும். பின், விருப்பு, வெறுப்பின்றி மனுதாரர் கோரிக்கை குறித்து எட்டு வாரங்களுக்குள் முடிவு செய்ய வேண்டும்,'' என்றார்.

**பூத்து குலுங்கும் மா மரங்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 17,2011,21:59 IST

காளையார்கோவில் : மா மரங்களுக்கு "நாப்தலின் அசிடிக்' அமிலம் தெளிப்பதால், விளைச்சல் அதிகரிக்கும், என, தோட்டக்கலை துறையினர் தெரிவித்தனர். காளையார்கோவில் விவசாயிகள் முன்பு கடலை, கரும்பு சாகுபடி செய்து வந்தனர். தண்ணீர், ஆள் பற்றாக்குறையை தவிர்க்க, மா மரம் வளர்ப்புக்கு மாறினர். சூசையப்பர்பட்டிணம் விவசாயி கஸ்பார் கூறுகையில், ""சில ஆண்டுகளாக வறட்சியால் மா விளைச்சல் பாதிக்கப்பட்டது. சமீபத்திய மழையால் அதிகளவில் பூத்துள்ளது. ஒரு சில இடங்களில் பூ, பிஞ்சுகள் உதிர்வதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்,'' என்றார். தோட்டக்கலை உதவி இயக்குனர் திருமுருகு கூறுகையில், ""பூத்தவுடன் பிளானோபிக்ஸ் ஒரு மில்லி மருந்தை, 4.5 லிட்டர் தண்ணீரில் கலந்து மாலையில் தெளித்தால், உதிர்தலை தடுக்கலாம். பூச்சி, நோய் தாக்குதல் இருந்தால் என்டோசல்பான் 2 மில்லி, பெவிஸ்டின் 2 கிராம் மருந்தை, 2 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். கூடுதல் மகசூல் பெற நாப்தலின் அசிடிக் ஒரு மில்லியை, 5 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும்,'' என்றார்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## வெங்காய ஏற்றுமதிக்கு தடை நீக்கம் மத்திய அரசு அறிவிப்பு

*புதுடெல்லி, பிப்.18–*

*வெங்காய ஏற்றுமதிக்கான தடையை மத்திய அரசு நீக்கம் செய்து உத்தரவு பிறப்பித்துள்ளது.*

*வெங்காய விலை குறைந்தது*

*வெங்காய ஏற்றுமதி மீதான தடை ரத்து செய்யப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.*

*கடந்த டிசம்பர் மாதம் இந்தியா முழுவதும் வெங்காயத்தின் விலை கிலோ 100 ரூபாய் வரை உயர்ந்ததால் வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது. தற்போது உற்பத்தி சீரடைந்து விட்டதால் உள்நாட்டில் வெங்காயத்தின் விலை கணிசமாக குறைந்துள்ளது. மத்திய பிரதேச மாநிலம் நாசிக் மொத்த மார்க்கெட்டில் வெங்காயம் விலை கிலோ ரூ.4 முதல் ரூ.12 வரை விற்பனையாகிறது. இதனால் தங்களுக்கு நஷ்டம் ஏற்படுவதாகவும் ஏற்றுமதி மீதான தடையை நீக்க வேண்டும் என்றும் விவசாயிகள் வலியுறுத்தி வருகிறார்கள்.*

*ஏற்றுமதி தடை நீக்கம்*

*இதையடுத்து மத்திய மந்திரிசபையின் சிறப்பு குழு (உணவு) நேற்று பிரணாப்முகர்ஜி தலைமையில் கூடி வெங்காய ஏற்றுமதிக்கான தடையை நீக்க முடிவு செய்தது.*

*ஆனாலும் ஏற்றுமதியை கட்டுக்குள் வைப்பதற்காக ஒரு டன் குறைந்த பட்சம் ரூ.28 ஆயிரம் விலைக்குதான் ஏற்றுமதி செய்யப்படவேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் நவம்பர் வரையிலான காலத்தில் இந்தியாவில் இருந்து வளைகுடா நாடுகள் மற்றும் இலங்கை, மலேசியாவுக்கு 11 லட்சத்து 50 ஆயிரம் டன் வெங்காயம் ஏற்றுமதியானது என்பது குறிப்பிடத்தக்கது.*

## *கடந்த 9 வாரங்களுக்கு பிறகு உணவு பொருள் பணவீக்கம் 11.05 சதவீதமாக குறைந்தது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*நாட்டில் உணவு பொருள்களுக்கான பணவீக்கம், பிப்ரவரி 5–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், கடந்த ஒன்பது வாரங்களில் இல்லாத அளவிற்கு 11.05 சதவீதமாக குறைந்துள்ளது. முந்தைய வாரத்தில் இது 13.07 சதவீதமாக இருந்தது. இதனுடன் ஒப்பிடும்போது, 2.02 சதவீதம் குறைந்துள்ளது. தொடர்ந்து இரண்டு வாரமாக உணவு பொருள் பணவீக்கம் குறைந்து வருகிறது.*

கோதுமை

*ஓர் ஆண்டு கால அடிப்படையில், உருளைக்கிழங்கு (13.63 சதவீதம்), பருப்பு வகைகள் (5.88 சதவீதம்), கோதுமை (2.54 சதவீதம்) ஆகியவற்றின் விலை குறைந்ததே இதற்கு காரணமாகும்.*

*அதேசமயம், ஓர் ஆண்டு கால அடிப்படையில், வெங்காயம் விலை 31.33 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, காய்கறிகள் விலை 24 சதவீதம் உயர்ந்தது. மேலும், பால் மற்றும் பழங்கள் விலை முறையே 11.66 சதவீதம் மற்றும் 12.21 சதவீதம் மற்றும் முட்டை, இறைச்சி, மீன் விலை 15.14 சதவீதம் உயர்ந்துள்ளது.*

*வெங்காயம் விலை விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்ததையடுத்து, சென்ற சில மாதங்களாக உணவு பணவீக்கம் உயர்ந்து வந்தது. சென்ற டிசம்பர் 25–ந் தேதி அன்று இது 18 சதவீதத்தை தாண்டியது. உணவு பணவீக்கம் அதிகமாக இருப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தும். உணவு பணவீக்கத்தை கட்டுப்படுத்தும் வகையில் பாரத ரிசர்வ் வங்கி, சென்ற ஓர் ஆண்டில், முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதத்தை ஏழு முறை உயர்த்தியது.*

*நிதி அமைச்சர்*

*இந்நிலையில், இம்மாதத்தின் முதல் வாரத்தில், உணவு பணவீக்கம் குறைந்துள்ளது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தியாகும். இது குறித்து மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறும்போது, "நாட்டில் உணவு பணவீக்கம் ஒற்றை இலக்க அளவிற்கு குறைந்துவிடும். பொது பணவீக்கமும் குறைந்து வருகிறது. இவை ஆரோக்கியமான அறிகுறிகளாகும்" என்று தெரிவித்தார்.*

*சென்ற டிசம்பர் மாதத்தில் 8.43 சதவீதமாக இருந்த பொது பணவீக்கம், ஜனவரி மாதத்தில் 8.23 சதவீதமாக குறைந்துள்ளது.*

## வருகிற மே மாதம் கோடை விழாவை முன்னிட்டு கோத்தகிரி நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சி நடைபெறுமா?

*கோத்தகிரி, பிப்.18–*

*கோத்தகிரி நேரு பூங்காவில் இந்த ஆண்டு காய்கறி கண்காட்சி நடைபெறுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.*

*நேரு பூங்கா*

*கோத்தகிரி காமராஜ் சதுக்கம் பகுதியில் சுமார் 3 ஏக்கர் பரப்பளவில் நேரு பூங்கா அமைந்துள்ளது. கடந்த 93–ம் ஆண்டு முதல் நேரு பூங்கா தோட்டக்கலை துறை பராமரிப்பில் இருந்து வந்தது. அதற்கு முன்பு பேரூராட்சி நிர்வாகத்திடம் இருந்தது. தோட்டக்கலை துறையின் நடவடிக்கையால் நேரு பூங்கா புதுப்பொலிவுடன் காணப் பட்டது. பூங்காவின் மையப் பகுதியில் ரோஜா மேடை அமைக்கப்பட்டு, பெங்களூரில் இருந்து ரோஜா செடிகள் கொண்டு வரப்பட்டு, நடவு செய்யப்பட்டன. இவைகள் ஆரஞ்சு, வெள்ளை, ரோஸ், சிவப்பு உள்பட பல்வேறு வண்ணங்களில் மலர்ந்து சுற்றுலா பயணிகளை கவர்ந்தன.*

*டேலியா மலர்கள்*

*இது தவிர டேலியா மலர்கள், பேர்டு ஆப் பேரடைஸ், பிட்டோனியா, ப்ளாக்ஸ், பேன்சி, கார்னேசன், ஸ்வீட் வில்லியம் என பல்வேறு மலர் செடிகள் கோடை காலத்தில் மலர தொடங்கி விடும். இவற்றை கோடை விடுமுறையை கழிக்க வரும் சுற்றுலா பயணிகள் கண்டு ரசித்து சென்றனர்.*

*ஊட்டியில் மே மாதம் நடைபெறும் கோடை விழாவையொட்டி கோத்தகிரி நேரு பூங்காவில் கடந்த 2 ஆண்டுகளாக காய்கறி கண்காட்சி நடத்தப்பட்டது.*

*காய்கறி கண்காட்சி நடத்தப்படுமா?*

இந்த நிலையில் நேரு பூங்கா கடந்த ஜனவரி மாதம் முதல் மீண்டும் பேரூராட்சி நிர்வா கத்தின் கீழ் கொண்டு வரப் பட்டது. அதன் பிறகு பூங்காவில் புதிய ரக மலர் செடிகள் நடவு செய்யப்பட வில்லை. புல் தரைகள் பசுமை இழந்து காணப்படுகிறது. இதனால் இந்த ஆண்டு வருகிற மே மாதம் வழக்கம் போல் காய்கறி கண்காட்சி நடத்தப்படுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஊட்டியில் மலர் கண்காட்சிக்கான ஏற்பாடு கள் நடந்து வருகிறது. ஆனால் கோத்தகிரி நேரு பூங்காவில் எந்த ஏற்பாடும் நடைபெறாத தால், காய்கறி கண்காட்சி நடைபெறுமா? என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

கோத்தகிரியை பொறுத்த மட்டில் சுற்றுலாவில் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளது. கடந்த காலங்களில் நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சி நடத்தப்பட்டது பொது மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. எனவே இந்த ஆண்டும் நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சி மற்றும் கோடை விழா நடத்த வேண் டும் என்பது பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் கோரிக்கையாக உள்ளது.

யார் நடத்துவது?

இது குறித்து கோத்தகிரி பேரூராட்சி தலைவர் போஜன் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் கோடை விழாவுக்கு என மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இந்த ஆண்டும் நேரு பூங்காவில் காய்கறி கண்காட்சி கண்டிப் பாக நடைபெறும். காய்கறி கண்காட்சியை பேரூராட்சி சார்பில் நடத்துவதா? அல்லது தோட்டக்கலை துறை மூலம் நடத்துவதா? என்பது பற்றி மாவட்ட கலெக்டரிடம் பேச உள்ளோம். அதன் பிறகு முடிவு செய்யப்படும்.

கோடை விழா நடத்துவது பற்றி கதர்வாரிய துறை அமைச்சரிடமும் பேசி உள்ளேன்.

இந்த ஆண்டு கண்டிப்பாக காய்கறி கண்காட்சி நடத்தப் படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# மார்க்கெட் நிலவரம்

## சென்னை மார்க்கெட்

**சர்க்கரை**

வெளிச்சந்தை சர்க்கரை
ஒரு குவிண்டால் 2,850-2,870

**மணிலா பயறு**

80கிலோ கொண்ட மூட்டை
3,300-3,350

**கடலை எண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
7,500-00

**கடலை புண்ணாக்கு**

70 கிலோ மூட்டை
(சாக்கு வரிஉள்பட) 1,450-00

**தேங்காய் எண்ணெய்**

15 கிலோ கிராம் கொண்ட
டின் (வரி உள்பட) 1,810-00

**நல்லெண்ணெய்**

குமாரகுரு, திருமால், பிள்ளையார், சீனிவாசா, புவனேசுவரி, பெருமாள், பிருந்தாவனம் ஆகிய ரகங்கள்,
1குவிண்டால்(வரி உள்பட) 11,500-00
டின் (15 கிலோ) 1,700-00

**விளக்கெண்ணெய்**

ஒரு குவிண்டால் (வரி உள்பட)
12,300.00
15கிலோ டின் (வரி உள்பட) 1,700-00

**சூரியகாந்தி எண்ணெய்**

சுத்திகரிக்கப்பட்டது 15 கிலோ
டின் (வரிஉள்பட) 1,195.00

**ரீபைண்டு ஆயில்**

(சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்)
15 கிலோ டின் (வரி உள்பட) 1,310.00

**வனஸ்பதி**

டின் ஒன்றுக்கு (வரி உள்பட) 1,110.00

**பாமாயில்**

10 கிலோ டின் (வரி தனி)
610-00

## பருப்பு வகைகள் மார்க்கெட்

கோவை,பிப்.17-
கோவை டி.கே.மார்க்கெட் வியாபாரிகள் சங்கத்தில் பருப்பு வகைகள் விலை விவரம் வருமாறு:-

| பருப்புவகைகள் | 100கிலோ மூட்டை | ஒரு கிலோ |
|---|---|---|
| மஞ்சள் நெ.1 | ரூ. 19,000 | 190.00 |
| மல்லி (40கி) | ரூ. 2,400 | 64.00 |
| புளி (40கி) | ரூ. 8,400 | 88.00 |
| வரமிளகாய் (20கி) | ரூ. 2,000 | 110.00 |
| துபருப்பு | ரூ. 6,500 | 67.00 |
| கபருப்பு (பாம்பே) | ரூ. 3,900 | 41.00 |
| உளுந்தம் பருப்பு (கருப்பு) (50 கி) | ரூ. 7,100 | 73.00 |
| உபருப்பு(வெள்ளை) | ரூ. 6,700 | 70.00 |
| தட்டைபயிறு | ரூ. 3,600 | 38.00 |
| மொச்சை பயிறு (அவரை) | ரூ. 5000 | 52.00 |
| கண்டங் கடலை | ரூ. 3200 | 34.00 |
| பொட்டுக்கடலை(54கி) | ரூ. 4,400 | 48.00 |
| நிலக்கடலை(80கி) | ரூ. 6,400 | 66.00 |
| பச்சைபயிறு | ரூ. 6,000 | 62.00 |
| கொள்ளு | ரூ. 2,000 | 22.00 |
| கபருப்பு (டெல்லி) | ரூ. 3,300 | 35.00 |
| சர்க்கரை | ரூ. 2,930 | 30.00 |

## மற்ற மாநில பஞ்சு விலை

கோவை,பிப்.17-
கோவை, உப்பிலிபாளையம், காமராஜர் ரோடு, தென்னிந்திய பருத்தி பஞ்சாலை சங்கத்தின் மற்ற மாநில பஞ்சு விலை

(ஒரு குவிண்டாலுக்கு) விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. வி.797 22எம்.எம் | ரூ. | 13,216 |
| 2. ஜெயதர் 22 எம்.எ | ரூ. | ——— |
| 3. ஜே 34 எஸ்.ஜி. 24 எம்.எம் (புதியது) | ரூ. | 16,073 |
| 4. எம்.இ.சி.எச் (மத்திய பிரதேசம் | ரூ. | 16,591 |
| 5. சங்கர் 6 28 எம்.எம். புதியது | ரூ. | 16,591 |
| 6. எம்.சி.யு. 5 32 எம்.எம். | ரூ. | 16,872 |
| 7. டி.சி.எச். 32 34 எம்.எம். (கர்நாடகா) புதுசு | ரூ. | 23,056 |

## எண்ணை மார்க்கெட்

கோவை,பிப்.17-
கோவை சமையல் எண்ணை வியாபாரிகள் சங்கத்தில் நேற்றைய எண்ணை விலை விவரம் வருமாறு:-

| எண்ணை வகை | (15கிலோ) | (1லிட்டர்)சில்லரை விலை |
|---|---|---|
| ரீபைண்ட் ஆயில் | | |
| கணபதி பிராண்ட் | ரூ.1,320 | 85.00 |
| கோல்டன் சன் பிராண்ட் | ரூ.1160 | 72.00 |
| சன் பிளவர் ஆயில் | | |
| கோல்டு வின்னர் பிராண்ட் | ரூ.1220 | 76.00 |
| பருத்தி விதை எண்ணை | | |
| ஜி.ஆர்.பிராண்ட் | ரூ.1070 | 72.00 |
| அரிசி தவிடு எண்ணை | | |
| பூர்ணாபிராண்டு | ரூ.1100 | 74.00 |
| நல்லெண்ணை | | |
| காந்திமதி பிராண்ட் | ரூ. 1,420 | 110.00 |
| தேங்காய்எண்ணை | ரூ. 1680 | 120.00 |
| என்.கே.என்பிராண்ட் | ரூ. 1,820 | 120.00 |
| பாம் ஆயில் | | |
| ருசிபிராண்டு | ரூ. 1,070 | 63.00 |
| கடலைஎண்ணைவள்ளல்பிராண்டு | ரூ. 1,250 | 80.00 |
| வனஸ்பதி | | |
| விஸ்வி பய்ஸ் பிராண்ட் | ரூ. 1,280 | - |
| கிரேட் செப் பிராண்ட் | ரூ. 1,040 | - |
| அபிராமிபிராண்டு | ரூ. 1,100 | - |
| சாரதா பிராண்ட் | ரூ. 1,080 | - |

## மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்

மேட்டுப்பாளையம் காய்கறிகள் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி விலை விவரம் வருமாறு:-

| காய்கறிகள் | குறைந்தப்பட்ச விலை | அதிகப்பட்ச விலை |
|---|---|---|
| உருளைகிழங்கு(45 கிலோ) | ரூ.600.00 | ரூ. 750.00 |
| முட்டைகோஸ்(1 கிலோ) | ரூ 4.00 | ரூ. 6.00 |
| கேரட் (1 கிலோ) | ரூ.15.00 | ரூ.26.00 |
| பீட்ரூட் (1 கிலோ) | ரூ.8.00 | ரூ.11.00 |
| முள்ளங்கி ( 1 கிலோ) | ரூ.4.00 | ரூ.7.00 |
| பீன்ஸ்(1 கிலோ) | ரூ.15.00 | ரூ.18.00 |
| நூல்கோல்(1 கிலோ) | ரூ.10.00 | ரூ.15.00 |
| டர்னிப்பீஸ் (1 கிலோ) | ரூ.20.00 | ரூ.20.00 |
| பேராக்காய் | ரூ.5.00 | ரூ.8.00 |

## கோவை உழவர் சந்தை

கோவை,பிப்.17-
கோவை ஆர்.எஸ்.புரம் கவுலி பிரவுன் ரோட்டில் உள்ள கோவை உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படும் காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:-

காய்கறிகள் (கிலோவுக்கு)

| | | |
|---|---|---|
| எலுமிச்சம்பழம் | ரூ. | 36-00 |
| கத்தரிக்காய் | ரூ. | 26-28 |
| வெண்டைக்காய் | ரூ. | 31-30 |
| நாட்டுத்தக்காளி | ரூ. | 7-8 |
| ஆப்பிள் தக்காளி | ரூ. | 6-7.50 |
| புடலை | ரூ. | 14-18 |
| பீர்க்கான்காய் | ரூ. | 20-20 |
| சுரைக்காய் | ரூ. | 13-14 |
| பாகற்காய் | ரூ. | 14-15 |
| கொத்தவரை | ரூ. | 25-00 |
| பூசணிக்காய் | ரூ. | 19-00 |
| அரசாணிக்காய் | ரூ. | 10-11 |
| பேராக்காய் | ரூ. | 16-00 |
| பச்சை மிளகாய் | ரூ. | 18-20 |
| குண்டு மிளகாய் | ரூ. | 20-00 |
| சின்னவெங்காயம் | ரூ. | 32-34 |
| பெரியவெங்காயம் | ரூ. | 17-00 |
| இஞ்சி | ரூ. | 33-00 |
| முருங்கைக்காய் | ரூ. | 90-00 |
| உருளைக்கிழங்கு | ரூ. | 22-00 |
| சேனைகிழங்கு | ரூ. | 18-20 |
| கருணைகிழங்கு | ரூ. | 24-00 |
| சேப்பங்கிழங்கு | ரூ. | 22-00 |
| மரவள்ளிகிழங்கு | ரூ. | 15-00 |
| சக்கரவள்ளி கிழங்கு | ரூ. | 14-00 |
| முள்ளங்கி | ரூ. | 7-12 |
| கேரட் (ஊட்டி) | ரூ. | 32-34 |
| பீட்ரூட் (ஊட்டி) | ரூ. | 18-20 |
| நூல்கோல் | ரூ. | 24-26 |
| கொத்தமல்லி | ரூ. | 20-00 |
| ட்ரினிப்ஸ் | ரூ. | 20-00 |
| முட்டைகோஸ் | ரூ. | 12-14 |
| கவர்கோஸ் | ரூ. | 26-00 |
| புதினா | ரூ. | 16-00 |
| காலிப்பிளவர் | ரூ. | 18-20 |
| பொறியல் தட்டை | ரூ. | 18-20 |
| பச்சை மொச்சை | ரூ. | 28-30 |
| தேங்காய் | ரூ. | 13-14 |
| பட்டாணி | ரூ. | 20-42 |
| பூண்டு | ரூ. | 210-240 |
| கறிவேப்பிலை | ரூ. | 52-00 |
| அகத்தி | ரூ. | 14-00 |
| வாழைக்காய் | ரூ. | 16-00 |
| திராட்சை | ரூ. | 30-00 |
| குடைமிளகாய் | ரூ. | 32-00 |
| சாதா பீன்ஸ் | ரூ. | 24-00 |
| டபுள்பீன்ஸ் | ரூ. | 36-00 |
| கறிபீன்ஸ் | ரூ. | 20-26 |
| புஸ்பீன்ஸ் | ரூ. | 28-00 |
| காளான் | ரூ. | 80-140 |
| இளநீர் (ஒன்று) | ரூ. | 10-13 |
| சப்போட்டா1கிலோ | ரூ. | 16-00 |
| கொய்யா1கிலோ | ரூ. | 22-00 |
| மாதுளை1கிலோ | ரூ. | 170-00 |
| பப்பாளி 1 கிலோ | ரூ. | 15-00 |
| வரமிளகாய் | ரூ. | 80-00 |
| ஆப்பிள் | ரூ. | 110-00 |
| சாத்துக்குடி | ரூ. | 28-00 |
| நெல்லிக்காய் | ரூ. | 20-00 |
| ஆரஞ்சு | ரூ. | 38-00 |
| வெள்ளரி | ரூ. | 30-32 |
| புளி 1 கிலோ | ரூ. | 80-00 |
| பஜ்ஜிமிளகாய் | ரூ. | 36-00 |
| அவரை | ரூ. | 20-24 |
| மக்காச்சோளம் | ரூ. | 18-00 |
| துவரை | ரூ. | 20-00 |
| பூண்டு | ரூ. | 160-210 |

## வயநாடு மார்க்கெட்

வயநாடு மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி (குவிண்டாலுக்கு) விலை விவரம் வருமாறு:-

| | |
|---|---|
| மிளகு (நாடன்) | ரூ.22150 |
| மிளகு (சேட்டன்) | ரூ.25500 |
| மிளகு (வயநாடன்) | ரூ.23100 |
| கொட்டைபாக்கு (புதியது) | ரூ. 7200 |
| கொட்டைபாக்கு (பழையது) | ரூ. 8000 |
| சுக்கு(புதியது) | ரூ.16250 |
| சுக்கு(பழையது) | ரூ.10100 |
| ஏலக்காய் (வெள்ளை) | ரூ.1000 |
| ஏலக்காய் (பச்சை) | ரூ.1200 |
| தேங்காய் எண்ணை(100 லிட்டர்) | ரூ.10250 |
| கொப்பரை நாடன் | ரூ.6275 |
| கொப்பரை ராசு | ரூ.6600 |
| கொப்பரை தில்பசன் | ரூ.7075 |
| கொப்பரை ராஜிப்பு | ரூ.7350 |
| உருண்டை கொப்பரை | ரூ. 6700 |
| ரப்பர் ஆர்.எஸ்.5 | ரூ. 23450 |
| ரப்பர் ஆர்.எஸ்.4 | ரூ. 21700 |
| ரப்பர் பால் | ரூ. 17000 |
| காப்பி | ரூ. 9400 |
| உருண்டைகாப்பி (52 கிலோ) | ரூ. 5250 |
| நேந்திரகாய் | ரூ. 1550 |
| இஞ்சி | ரூ. 1200 |

## தங்கம் மார்க்கெட் நிலவரம்

| தங்கம் | சென்னை | கோவை | திருப்பூர் |
|---|---|---|---|
| 22 காரட்(1 பவுன்) | 15,248.00 | 15,392.00 | 15,400.00 |
| ஒரு கிராம் | 1,906.00 | 1,924.00 | 1,925.00 |
| வெள்ளி | | | |
| 1 கிலோ | 47,075.00 | 49,600.00 | 49,000.00 |
| ஒரு கிராம் | 50.35 | 49.60 | 49.00 |